DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.417/2022
Deposition of witness for PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.சுப்பிரமணி தேவர் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | 80 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.2.2023

(1வது எதிரி இறந்து விட்டார். 2,3 எதிரிகள் ஆஜர், 4வது எதிரி ஆஜரில்லை 4ம்எதிரி சார்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டடு அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை –

1. நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வயதான காரணத்தால் வீட்டிலிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (நீதிமன்றத்தில் எதிரிகள் பாண்டி மற்றும் திரிபாதி ஆகியோர் ஆஜராகியுள்ளனர். 1ம்எதிரி சின்ன முனியாண்டி இறந்து விட்டார். சாட்சி திரிபாதி மற்றும் பாண்டியை பெயர் கூறி சரியாக அடையாளம் காட்டியுள்ளார. சின்னமுனியாண்டி இறந்து விட்டார் என்ற விவரத்தை சாட்சியே கூறியுள்ளார்) சாமிநத்தத்தில் எனது தாயாருக்குசொந்தமான இடத்தில் வீடு கட்டியுள்ளேன். எனது மகன்கள் கருப்பசாமி, சக்கரை ஆகியோருக்கு தனித்தனியாக வீடு கட்டிகொடுத்துள்ளேன். வீட்டின் சர்வே எண்.1392 ஆகும். எனது குடும்பத்தாருக்கு மொத்தம் 12 ஏக்கர் 20 செண்ட் நிலம் உள்ளது. எனக்குமட்டும் 3 ஏக்கர்நிலம் உள்ளது. அந்த நிலத்தில்தான் வீடு கட்டியுள்ளேன். கடந்த 10 வருடத்திற்கு முன்பு எதிரிகள் சின்னமுனியாண்டி, திரிபாதி, பாண்டி ஆகிய மூன்று பேரும் சேர்ந்து எனது வீட்டை ஜேசிபி வாகனத்தை வைத்து இடிக்க வந்தனர். நான் எதிரிகளை பார்த்து குடியிருக்கும் வீட்டை இடிக்க வந்தீர்கள்என்று கேடடேன். அப்போது எதிரிக்ள

முவரும் சேர்ந்து ஜேசிபி வாகன ஓட்டுநர் தர்மர் என்பவரிடம் எனது வீட்டை பார்த்து இடியுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு நான் வீட்டை இடிக்காதீர்கள் என்று சொன்னேன். அதற்குஎதிரிகள் இந்த கிழட்டு பயலை இடிடா என்று சொன்னவுடன் ஓட்டுநர் தர்மர் என் மீது இடிக்க வரவும் நான் பயந்து விலகி கொண்டேன். எதிரிகள் அந்த இடத்திற்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு வாங்கி விட்டதாக கூறினார்கள். ஆனால் அதற்கு நான் வழக்கு நிலுவையில் இருப்பதாக கூறினேன். பின்பு எதிரிகள் சேர்ந்து 2 வீட்டையும் இடித்தார்கள். (வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள போட்டோக்களை பார்வையிட்டு எதிரிகளால் வீட்டை இடித்து சேதப்படுத்தி அதன்மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டதாக கூறினார். புகைப்படத்திலுள்ள் வீட்டின் சேதமானது அ.சா .பொ. 1 முதல் 10 ஆகும். ) வீட்டின் மதிப்புசம்பவ சமயத்தில் சுமார் ரூ.20 லட்சமாகும். தேசமடைந்த பகுதி மற்றும் வீட்டிலிருந்த சாமான்களோடு சேர்த்து ரூ.5 லட்சம் வரையிருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உ்ளள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனுவை மல்லி காவல் நிலையத்தில வைத்து கொடுத்தேன். புகார் மனு **அசாஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(By looking at the demeanur of the witness this court satisfies that the witness is competent as under sec.118 of Indian Evidence Act.)

வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.417/2022
Deposition of witness for PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திருமதி.பெரியம்மாள் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | 76 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.2.2023

(1வது எதிரி இறந்து விட்டார். 2,3 எதிரிகள் ஆஜர், 4வது எதிரி ஆஜரில்லை 4ம்எதிரி சார்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டடு அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை –

1. நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா.,1 எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். (நீதிமன்றத்தில் எதிரிகள் பாண்டி மற்றும் திரிபாதி ஆகியோர் ஆஜராகியுள்ளனர். 1ம்எதிரி சின்ன முனியாண்டி இறந்து விட்டார். சாட்சி திரிபாதி மற்றும் பாண்டியை பெயர் கூறி சரியாக அடையாளம் காட்டியுள்ளார. சின்னமுனியாண்டி இறந்து விட்டார் என்ற விவரத்தை சாட்சியே கூறியுள்ளார்) கடந்த 10 வருடத்திற்கு முன்பு எனது பேரன் கனகவேல் என்பவர் என்னிடம் வந்து நமது வீட்டை சின்னமுனியாண்டி. திரிபாதி, பாண்டி மூவரும் சேர்ந்து ஜேசிபி வாகனம் மூலம் வீட்டை இடிப்பதாக கூறினார். ஜேசிபி வாகனத்தை தர்மர் என்பவர் ஓட்டி வந்திருந்தார். நான் போய் எதிரிகளிடம் குடியிருக்கும் வீட்டை இப்படி இடிக்கிறீர்கள என்று கேட்டேன். அப்போது எதிரிகளான சின்ன முனியாண்டி, திரிபாதி, பாண்டி சேர்ந்து ஓட்டுநர் தர்மரிடம் இவளை துக்கி உள்ளே போடுடா என்று கூறினார. நான் பயந்து கெண்டு மல்லி காவல்நிலையம் வந்து நடந்த விவரத்தை கூறினேன். எனது அண்ணனிடம்

எதிரிகள் சண்டை போட்டார்கள். எதிரிகள் சேர்ந்து எனது அண்ணன் வீட்டை இடித்து விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள எனது அண்ணனின் வீட்டை எதிரிகள் சேர்ந்து ஜேசிபியால் இடித்து விட்டார்கள். எனது அண்ணனின் வீடு சுமார் ரூ.10 லட்சம் வீதம் 20 லட்சம் இருக்கும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(By looking at the demeanur of the witness this court satisfies that the witness is competent as under sec.118 of Indian Evidence Act.)

வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.417/2022
Deposition of witness for PW.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.கனகவேல் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | 22 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.2.2023

(1வது எதிரி இறந்து விட்டார். 2,3 எதிரிகள் ஆஜர், 4வது எதிரி ஆஜரில்லை 4ம்எதிரி சார்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டடு அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை –

1. நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். கார்த்திகைபட்டியிலுள்ள சாம்பிராணி கம்பெனியில் வேலை செய்கிறேன. அசா.1 எனது தாத்தா. அசா.2 எனது பாட்டி. எதிரிகளை தெரியும். எதிரி திரிபாதி மற்றும்பாண்டி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். 1ம்எதிரி சின்னமுனியாண்டி தற்போது இறந்து விட்டார். எதிரி தர்மரை பார்த்தால்என்னால் அடையாளம் காட்ட முடியும். கடந்த 10 வருடத்திற்கு முன்பு நான் எனது தாத்தா சுப்பிரமணியன் வீடடிலிருந்தேன். அப்போது எதிரிகள் சின்னமுனியாண்டி, திரிபாதி, பாண்டி மறறும் ஜேசிபி ஓட்டுநர் தர்மர் எனது தாத்தா வீட்டை இடிக்க வந்தனர். அதற்க எனது தாத்தா எதற்கு குடியிருக்கும் வீட்டை இடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு உன்னை தொலைத்து விடுவோம என்று மிரட்டினார்கள்.ீ உடனே எனது பாட்டி பெரியம்மாவிடம் சொல்லி அவர் வந்தவுடன் பாட்டியையும் என்னையும் பார்த்து உங்களையும் அங்கு வைத்து புதைத்து விடுவேன் என்று மிரட்டினார்கள். பின்பு எதிரிகள் எனது தாத்தா வீட்டை ஜேசிபி வைத்து இடித்து கம்பிவேலி போட்டு விட்டனர். பின்புநாங்க்ள உள்ளே செல்ல விடாமல் வீட்டை சுற்றி குழி

தோண்டி விட்டனர். எதிரி பாண்டி வீட்டிற்கு வரும் மின்சார வயரை துரட்டியால் வெட்டி சேதப்படுத்தி விட்டார். (சாட்சி புகைப்படத்தை அசாபொ1 முதல் 10 வரை பார்வையிட்டு அவரது சேதமடைந்த தாத்தா வீடடை சரியாக அடையாளம் காட்டினார்) இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.